


# 2012 புத்தாண்டு வாழ்த்துக்கள்

அன்புள்ள தெய்வீக நோனி குடும்ப உறுப்பினர்களே,

தெய்வீக நோனி குடும்பத்தால் வழிநடத்தப்பட்டு வரும் ஆரோக்கிய புரட்சியின் ஒரு பகுதியாகப் பங்கெடுத்து வருவதற்கு உங்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டின் உங்களது பங்கேற்பு ஆரோக்கிய இயக்கத்திலும் ஆரோக்கிய உலகிலும் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

நோயுற்ற வாழ்விலிருந்து நோயற்ற ஆரோக்கிய வாழ்வை நோக்கிச் செல்லும்வண்ணம் எண்ணற்ற மக்கள் தங்கள் சிந்தனையை மாற்றிக்கொண்டுள்ளனர்.

தங்கள் உணவுப்பழக்கங்களை மாற்றிக்கொண்டுள்ளனர்.

தங்கள் வாழ்க்கைமுறையை எண்ணற்ற மக்கள் மாற்றிக்கொண்டுள்ளனர்.

ஆரோக்கியத்தை நோக்கிச்செல்லும் உணர்வை நாம் மக்களின் மனதில் ஆழமாக ஏற்படுத்தியுள்ளோம்.

ஆரோக்கிய உணர்வலைகளை உருவாக்குவதற்கு 2011ஆம் ஆண்டில் நாம் பின்வரும் முன்முயற்சிகளை முன்னெடுத்துச்சென்றிருக்கிறோம்.

1. வாழிய நலம் இதழ் தொடக்கம் - தமிழ் ஆரோக்கிய இதழ் - ஜனவரி, 2011
2. அன்பு, அமைதி, நல்லிணக்கம் இயக்கத் தொடக்கம் - ஜனவரி, 2011
3. எம்பவர் - ஆரோக்கிய இதழாக மாற்றியமைக்கப்பட்டது - பிப்ரவரி, 2011
4. நோனி தினம், உலக ஆரோக்கிய மாநாடு - மார்ச், 2011
5. ஆரோக்கிய நூல் விற்பனைநிலையத் தொடக்கம் - ஏப்ரல், 2011
6. முதல் தமிழ்நாடு மாநில ஆரோக்கிய மாநாடு, திருச்சி, ஜூன், 2011
7. கிராம ஆரோக்கிய விழிப்புணர்வு இயக்கத் தொடக்கம் (WAM) - ஜூலை, 2011
8. வாழ்க்கை வெற்றிக் கல்விக்கழகத் தொடக்கம் (LSA) - ஆகஸ்ட், 2011
9. வருங்கால உணவகம் தொடக்கம் - செப்டம்பர், 2011
10. நோனி ஆய்வும், தேசிய ஆரோக்கிய கருத்தரங்கும் - அக்டோபர், 2011
11. ஆரோக்கிய நகைச்சுவை அரங்கத் தொடக்கம் (WHP) - அக்டோபர், 2011
12. இலங்கைத் தமிழர்கள், மீனவச் சமுதாயம், அமைப்புசாரா தொழிலாளர்கள், தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோர்களுக்கான ஆரோக்கியத் திட்டங்கள் தொடங்கப்பட்டன
13. தேசிய ஆரோக்கிய மாநாடு - நவம்பர், 2011
14. ஆரோக்கிய இணையத் தொலைக்காட்சித் தொடக்கம் (WWC) - நவம்பர், 2011

15. ஆரோக்கிய புத்துணர்ச்சி மைய கட்டிடம் தொடங்கப்பட்டது - BOUNCE - நவம்பர், 2011

16. முதல் கேரள மாநில ஆரோக்கிய மாநாடு, பாலக்காடு - டிசம்பர், 2011

17. இரண்டாவது தமிழ்நாடு மாநில ஆரோக்கிய மாநாடு, கோவை - டிசம்பர், 2011

18. இளம் தலைமுறையினருக்கான ஆரோக்கியச் சக்தியூட்டும் இயக்கத் தொடக்கம் (WEM) டிசம்பர், 2011

தெய்வீக நோனி குடும்ப ஆரோக்கியச் சேவைக்கான உங்கள் அன்பான பங்கேற்பும், பங்களிப்புமே மேற்கண்ட அனைத்தையும் சாத்தியமாக்கி இருக்கின்றன.

உங்களைச் சுற்றி இருக்கும் மக்களின் வாழ்வில் பெருமதிப்பை உருவாக்கவும், உங்கள் வாழ்வின் தரத்தை அடுத்த உயர்ந்த நிலைக்கு உயர்த்திக் கொள்ளவும், உங்களிடம் ஒரு மதிப்புமிகு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், உங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள நான் உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

இந்த ஆண்டு கீழ்க்காணுமாறு செயல்பட நாம் உறுதி பூணுவோமாக :

- இந்த 2012 ஆம் ஆண்டில், ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 1000 பேருக்கும், அவர்கள் ஒவ்வொருவரும் 100 பேருக்கும் சக்தியூட்டும் வகையில் இந்த ஆரோக்கிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.
- இந்த 2012 ஆம் ஆண்டில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட அளவில் 100 பேரிடையேயும் அவர்கள் ஒவ்வொருவரும் 10 பேரிடையேயும் தெய்வீக நோனியைக் கொண்டு செல்ல முனைவோம்.
- இந்த 2012 ஆம் ஆண்டில், ஆரோக்கிய இயக்கத்திற்கான 10,000 தலைவர்களை உருவாக்கும் நமது இலக்கை அடைய ஒவ்வொருவரும் 10 ஆரோக்கியத் தலைவர்களை உருவாக்கி வளர்த்தெடுப்போம்.
- 2020 ஆம் ஆண்டுக்குள், 100 கோடி மக்களுக்கு ஆரோக்கிய விழிப்புணர்வை உருவாக்கும் நமது இலட்சியத்தை அடைய, இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வை மேம்படுத்த, இந்த 2012 ஆம் ஆண்டில் நாம் புத்தம் புதிய புதுமை நிறைந்த ஆரோக்கிய முன்முயற்சிகளை உருவாக்குவோம்.

உங்கள் வாழ்வில் வெற்றி அடையவும் ஆரோக்கியம் பெறவும் நீங்கள் பேரார்வத்துடன் பங்கேற்கும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எனது அன்பு வாழ்த்துகளும், ஆசிகளும் உரித்தாகட்டும். இந்த 2012 ஆம் ஆண்டை நேர சுதந்திரம், ஆரோக்கியச் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் ஆகியவற்றை அடைவதன் மூலம் முழுமையான வாழ்க்கை சுதந்திரத்திர வழிக்கான ஆண்டாக ஆக்குவோம்.

உங்கள் வாழ்வில் முழு சுதந்திரம் அடைவதற்கான ஆதரவும், வழிகாட்டுதலும் பெற என்னை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

என்னைப் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

அன்புடனும் பிரகாசத்துடனும், அற்றலுடனும்

பி.ஐ. பீட்டர்

